## தலைப்பு 150 – பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2019 மே 24 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 16 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு பின்வரும் தேவைப்பாடுகளிற்கான குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

(அ) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது.

(ஆ) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றுக்களின் மீதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். நிதிச் செயலாற்றல் கூற்றின் பின்வரும் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் அவ் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 7,540,852 ஆக இருந்த போதிலும் இது ரூபா 2,977,553 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததால் | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேணடும். | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றை தயாரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த மாதிரியில் கட்டுநிதிக் கணக்கொன்று காணப்பட்டதன் காரணமாக கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் சீராக்கல் கணக்கை தயாரிப்பதற்கும் அதற்கிணங்க இறுதிக் கணக்குகளை தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

ரூபா 4,563,299 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் ரூபா 1,563,993 ஆக இருந்த போதிலும் இது ரூபா 1,563,818 ஆக குறிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 175 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) மேற்குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அக் கூற்றுக்களின் வருமான மற்றும் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 309,777,317 ஆக இருந்த போதிலும் இது ரூபா 305,153,843 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 4,623,474 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iv) திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றின் பிரகாரம் மீண்டெழும் செலவினம் ரூபா 217,103,227 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இது ரூபா 216,935,194 ஆக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 168,033 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(v) திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றின் பிரகாரம் மூலதனச் செலவினம் ரூபா 59,856,632 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இது ரூபா 55,856,631 ஆக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 4,000,001 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(vi) திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 1,564,017 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இது ரூபா 1,563,842 ஆக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 175 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(vii) திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 5,949,577 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இது ரூபா 5,178,059 ஆக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 771,518 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(viii) மேற்குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவினம் ரூபா 284,473,453 ஆக இருந்த போதிலும் இது ரூபா 279,533,726 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 4,939,727 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ix) மேற்குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 25,303,864 ஆக இருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இது ரூபா 25,620,117 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 316,253 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(x) நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்று என்பற்றில் காட்டப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கு மீதிகளிற்கிடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரியின் இறுதிக் கணக்கு கூற்றில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் மீதிகள் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். திறைசேரியின் இறுதிக் கணக்கு கூற்றின் பிரகாரம் அமைச்சின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 157,383,793 ஆக இருந்த போதிலும் இது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 254,645,748 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 97,261,955 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேணடும். | அமைச்சின் அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீதிகளை CIGAS முறைமைக்கு உட்சேர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் காசு மீதி பதிவு செய்யப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) சுற்றறிக்கையின் 7(iv) ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றின் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதிக்குச் சமமான பெறுமதி தேறிய சொத்துக்கள்/ மூலதனத்தின் கீழ் ஒதுக்கங்களின் பெறுமதியாக காட்டப்பட வேண்டும். 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 254,645,748 தொகை அமைச்சின் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதியாக காட்டப்பட்டிருந்த போதிலும் ஆதனம், பொறி ரூபா 157,383,793 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 97,261,955 தொகை குறைத்துக் காட்டப்பட்டது. | | |
| (இ) திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 25,620,116 ஆக இருந்தது. இது நடைமுறைப் பொறுப்பின் | | |

கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தகைய தீர்ப்பனவு செய்யப்படாத காசு மீதி நிதி நிலைமைக் கூற்றில் காசும் காசுக்குச் சமனானவையாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(V) ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சின் தேறிய சொத்துக்கள் முற்பணக் கணக்கு மீதியிலிருந்து வைப்புக் கணக்கு மீதியை கழித்ததன் பின்னர் ரூபா 10,046,566 ஆக காட்டப்பட வேண்டிய போதிலும் இது ரூபா 81,688,403 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 71,641,837 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டது.

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 2,977,593 தொகையான முற்பணப் பெறுவனவுகள் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேணடும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) ரூபா 1,563,842 வைப்புக் கொடுப்பனவு செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக ஏற்பட்ட காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) முற்பணப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 25,620,116 | | |

ஆக இருந்த போதிலும் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மீதியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **பிணைப் பதிவேடு** | | |
| | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பிணைப் பதிவேடொன்றை தயாரிப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | **நட்டங்களும் சேதங்களும் தொடர்பான பதிவேடு** | | |
| | நட்டங்களும் சேதங்களும் தொடர்பான பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் பேணுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | **வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம்** | | |
| | அமைச்சால் வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வாகன சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் பிரயாணம் செய்த தூரம் மற்றும் நுகரப்பட்ட எரிபொருள் என்பவற்றை பதிவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | **விடுமுறைப் பதிவேடு** | | |
| | விடுமுறைப் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | விடுமுறைப் பதிவேட்டை முறையாக தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | **கணக்காய்வு ஐயவினா பதிவேடு** | | |
| | கணக்காய்வு ஐயவினா பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 452(1) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பேணுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |

(ஊ) பொருட்பதிவேடு

| | | |
|---|---|---|
| பொருட்பதிவேட்டு புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(1) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பேணுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |

### 1.6.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று இடம்பெற்றமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | காலத்திற்குக் காலம் உரிய நிறுவனங்களுடனான செயன்முன்னேற்றக் கூட்டங்கள் மற்றும் அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்களுடனான கூட்டங்கள் என்பன அமைச்சால் நடாத்தப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் அக் கூட்டக் குறிப்புக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன் பிரகாரம் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்குதல் இடம் பெறுவதாகக் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.9 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 1.6.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103(1)(ஆ) | அரசாங்க ஆதனங்களிற்கு ஏதாவது நட்டங்கள் ஏற்பட்டால் அவை பொலிஸிற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற 16 வாகன விபத்துக்களில் 10 விபத்துக்கள் தொடர்பாக பொலிஸிற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(3) | முழு அறிக்கை ஒன்றினை தயாரிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட காலமொன்று எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டால் பூர்வாங்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் குறித்த சில விபத்துகள் தொடர்பான பூர்வாங்க அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு 04 மாதங்களிற்கு மேற்பட்ட காலப்பகுதியொன்று எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்த சில காரணங்கள் காரணமாக தவிர்க்கப்பட்டிருந்த பூர்வாங்க அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (iii) | நிதிப்பிரமாணம் 104(4) | விபத்து தொடர்பான விசாரணையின் பின்னர் விபத்து இடம்பெற்ற திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் முழு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முழுமையான அறிக்கைகளை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பணிவன்புடன் |

| | | | |
|---|---|---|---|
| | போது இடம்பெற்ற 16 விபத்துக்களில் 15 விபத்துக்கள் தொடர்பான முழு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 மாதங்கள் கடந்திருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | அறிவிக்கப்படுகின்றது. |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்<br>-------------------------------- | | | |
| 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய 01/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரசாங்கத்தால் உரித்தாக்கப்பட்ட வாகனங்களிற்கு உரிய நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற 33 வாகனங்களில் 10 வாகனங்களிற்கு அமைச்சின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களில் பெயர் பொறிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) அரச நிதிச் சுற்றறிக்கைகள்<br>-------------------------------- | | | |
| 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ரூபா 148,000 கூட்டுமொத்தமான செயல்நிமித்தக் கட்டுநிதிகள் பதவிநிலைத் தரத்திலில்லாத உத்தியோகத்தர்களிற்கு 17 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன. | அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

### 1.6.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தின் உத்தியோகத்தர்களிற்கு சம்பளங்கள் மற்றும் கூலிகளை செலுத்துவது தொடர்பான 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம் செயலகத்தின் உத்தியோகத்தர்களிற்கு பயன்படுத்தப்படாத விடுமுறைகள் | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எம்எஸ்டி 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தகைய படிகளின் கொடுப்பனவு அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை என தங்களால் குறிப்பிடப்பட்ட விடயத்தை கருத்தில் கொண்டு இப் படி கூலிகளுடன் தொடர்புபட்டிருந்ததன் காரணமாக இப் படிக் |

| | | | |
|---|---|---|---|
| | மீது படிகள் செலுத்தப்பட முடியாத போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அவ்வாறான படிகளாக முறையே ரூபா 701,450.34 மற்றும் ரூபா 575,821.67 தொகைகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப் படிகள் அதே போல் முன்னைய ஆண்டுகளிலும் செலுத்தப்பட்டிருந்தன. | | கொடுப்பனவு 2018 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் போக்குவரத்துப் படிகளிற்கு உரித்தற்ற உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்துப் படிகளாக 2017 சனவரி தொடக்கம் 2018 ஒக்தோபர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 3,419,246.24 தொகை செலவிடப்பட்டிருந்தது. | மேற்குறிப்பிட்டவாறு | ஏறத்தாழ முன்னைய 7 ஆண்டு காலப்பகுதியின் போது பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் பதவியணியினரிற்கு சம்பள அதிகரிப்பு எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் முறையான தீர்மானம் பெறப்பட்டதும் நிலைமையை சீர் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (இ) | சேவை உடன்படிக்கையின் பிரகாரம் 2018 மார்ச் 15 இல் சேவை முடிவுறுத்தப்பட வேண்டிய செயலகத்தின் முன்னாள் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) 2018 மார்ச் 24 இல் ஓய்வுபெறுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் அவ் உத்தியோகத்தரின் சேவையை நீடிப்புச் செய்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று 2018 பெப்ரவரி 08 மற்றும் 2018 மே 18 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருக்காததுடன் அமைச்சின் சேவைக்கு ஏற்கனவே இணைப்புச் செய்யப்பட்டிருந்த இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரொருவர் பதிற்கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவதற்காக அவ் அமைச்சரவை தீர்மானம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அத் தீர்மானம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் 2018 யூலை 31 வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 616,200 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் கடமைக்காக ஏற்றியிறக்கல் | முறையான அதிகாரத்துடன் உத்தியோகத்தர்கள் சேவைக்கமர்த்தப்பட வேண்டும். | 2018 யூலையில் அமைச்சால் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்திற்கு அமைச்சரவைத் தீர்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகையால் 2018 யூலை 31 இல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் உத்தியோகத்தரின் சேவையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சேவை நீடிப்பு எதிர்பார்க்கப்பட்டு அவரது பதிலிற்காக காத்திருந்த காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 790,624.94 (ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் உள்ளடங்கலாக) கொடுப்பனவை மீள்நிரப்புவதற்கு பிஆர்டிஎஸ் முகாமைத்துவத்தால் ஏற்கனவே தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்ட்டிருந்தன. 2018 யூலை 31 வரை அவரது சாதாரண கடமைகளிற்கு அவர் வருகை தந்திருந்ததுடன் அவரது கடமை எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு உறுதிச்சீட்டுக்களை |

| | | | |
|---|---|---|---|
| | போக்குவரத்து வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன.<br><br>மேற்படி நிலைமையின் கீழ் ரூபா 34,362,989 பெறுமதியான 164 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2018 மார்ச் 15 தொடக்கம் 2018 யூலை 31 வரையான காலப்பகுதிக்கு முறையான அங்கீகாரம் இல்லாமல் அக் காலப்பகுதியின் போது சேவையாற்றிய முன்னாள் பணிப்பாளரால் (நிர்வாகம் மற்றும் நிதி) அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | | அங்கீகரித்து கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) | அமைச்சரவை அங்கீகாரத்துடன் இணங்காமல் 2018 செப்தெம்பர் 20 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரின் சேவை முடிவுறுத்தப்பட்ட பின்னர் பதவி வெற்றிடத்திற்கு பதிற்கடமை அடிப்படையில் அலுவலகத்தின் பெண் கணக்காளர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். | உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரத்துடன் வேலைக்கமர்த்தப்பட வேண்டும். | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் காணப்பட்ட அதிகளவு பணி நிலைமையால் உத்தியோகத்தரை விடுவிக்க முடியாதிருந்ததன் காரணமாக அப்போது கடமையை மேவுகை செய்திருந்த பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் பெண் கணக்காளர் 2018.09.20 இல் வெற்றிடமான பதவிக்கு பதிற்கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தார். |
| (உ) | நிதிப்பிரமாணம் 135 இன் கீழான செயலகத்தின் அதிகாரக் கையளிப்பின் பிரகாரம் வெளிநாட்டுப் பிரயாணச் செலவினங்களை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் பணிப்பாளர் நாயகத்திற்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தெரிவுக் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்ட ரூபா 423,592 தொகையான வெளிநாட்டுப் பிரயாணச் செலவினம் கணக்காளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அதிகாரக் கையளிப்பின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2018 ஆகஸ்ட் 01 தொடக்கம் ஒக்தோபர் 31 வரை மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 44,529,662 தொகையான 89 கொடுப்பனவுகள் தொடர்பாக கொடுப்பனவுகளை சான்றுறுதிப்படுத்தி கொடுப்பனவு செய்யும் இரண்டு கடமைகளும் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காளர் மற்றும் நிர்வாகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் ஆகிய இரண்டு கடமைகளிற்கும் 2018 ஆகஸ்ட் 01 தொடக்கம் ஒக்தோபர் 31 வரை பதிற்கடமை அடிப்படையில் கணக்காளர் இணைப்புச் |

| | | |
|---|---|---|
| பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் கணக்காளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | செய்யப்பட்டிருந்தார். அந் நிலைமையின் அடிப்படையில் உறுதிச்சீட்டுக்களை சான்றுறுதிப்படுத்தி கொடுப்பனவு செய்தல் கணக்காளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>இதற்கு மேலதிகமாக கணக்குகள் பிரிவால் உரித்தாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட வளங்கள் அதிகாரக் கையளிப்பிற்கு தாக்கமளித்திருந்ததென அறிவிக்க வேண்டியது மிகவும் கட்டாயமானது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருமான மதிப்பீடுகள் முறையாக எதிர்வுகூறப்பட்டிருக்கவில்லை. ஆகையால் திருத்திய வருமான மதிப்பீட்டை விஞ்சி 2018 ஆம் ஆண்டிற்காக அமைச்சு தொடர்பான வருமானக் குறியீடு 20.03.02.21 இன் கீழ் வருமானமாக ரூபா 30,300,068 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும் இது திருத்திய வருமான மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 23 சதவீத முரணொன்றாக காணப்பட்டது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தார் (tar) வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த மக்களால் மெற்றிக் தொண்கள் தாரை இறக்குமதி செய்யும் அடிப்படையில் வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. அதற்கிணங்க குறித்த தொகை வெவ்வேறு கட்டணங்களாக கணிப்பிடப்பட முடியாதிருந்தது. ஆகையால் யதார்த்தமான மதிப்பீடு மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 18 செலவின விடயங்களிற்காக ரூபா 11.65 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச் | சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட | இணங்கப்பட்டுள்ளது. |

செலவின விடயங்கள் பயன்படுத்தப்பட்ட வேண்டும்.
பின்னர் சேமிப்புக்கள் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

### 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 233,391 தொகையான இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட வைப்பொன்று நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குழுவொன்றை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் உரிய நபரிற்கு தொகையை விடுவிப்பதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கும் செயற்பணியும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| எரிபொருள் விநியோகத்தின் தரம் மற்றும் நம்பிக்கைத்தன்மையை அபிவிருத்தி செய்தல் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் ஸ்தாபிப்பு நோக்கங்களில் ஒன்றாக உள்ளதுடன் பொருத்தமான கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்து, அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு மதிப்பீடு செய்தல் அமைச்சின் தொழிற்பாடுகளில் ஒன்றாக உள்ளது. அதற்கிணங்க 1,461 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வாடிக்கையாளர்களிற்கு எரிபொருளை விற்பனை செய்வதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அவ் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 1,254 நிலையங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் உரித்தாக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி | | |

| | | | |
|---|---|---|---|
| | 207 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியால் உரித்தாக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) | லங்கா இந்தியன் ஒயில் கம்பனியால் உரித்தாக்கப்பட்ட 207 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 3 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாத்திரம் 2018 ஆம் ஆண்டின் போது மேற்பார்வை செய்யப்பட்டிருந்ததுடன் இது கம்பனிக்குச் சொந்தமான மொத்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 1.4 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. ஆகையால் போதியளவு மாதிரிகள் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக போதியளவு மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டும். | நாட்டின் அதிகளவு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் (85%) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஆரம்ப படிமுறையொன்றாக பிராந்திய மேற்பார்வையாளர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட அமைச்சின் விசேட மேற்பார்வைக் குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டன. மேலும் இந்தியன் ஒயில் கம்பனியின் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மேற்பார்வை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் உதவியுடன் 2018.08.31 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | லங்கா இந்தியன் ஒயில் கம்பனியால் உரித்தாக்கப்பட்ட 1,254 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 5.8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 73 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சால் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டிருந்தன. எனினும் அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான தடையாக கருதப்படக் கூடியதாக எரிபொருள் நிரப்பு நிலையங்களிலுள்ள பொருண்மையான குறைபாடுகள் காணப்படுகின்றன என்பது அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. | எரிபொருளின் தரம் மற்றும் நம்பகமான வழங்கலிற்கான இடையூறுகளை தவிர்க்கும் வகையில் மேற்பார்வை நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டுள்ளது. பிராந்திய மேற்பார்வையாளர்கள் மூலம் அக் குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக எரிபொருள் வழங்கும் பம்ப்களை (pumps) திருத்துவதற்கும், சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும், பம்ப்களை பொறியிடும் தாமதத்திற்காக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.2 திட்டமிடல்**

**--------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு விடயம்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் பெற்றொலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. அதற்கிணங்க பின்வரும் விடயங்கள் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) 2018 ஆம் ஆண்டிற்கான நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது வேலையிலீடுபடுத்தப்பட்டுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள்.<br><br>(ii) பாதிடப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வருமானத் தலைப்பின் கீழும் வருமானத்தை சேகரிப்பதற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்.<br><br>(iii) வருடாந்த செயற்பாடுகளிற்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம்.<br><br>(iv) ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வருடாந்த பெறுகை திட்டம் (வாகன பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் தவிர்ந்த நிறுவன ரீதியான செயற்பாட்டு நடவடிக்கைகள்). | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டுள்ளது.<br><br>2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்குவதற்கு உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டள்ளது. |

**3.3 செயற்திட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2002 இன் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் மற்றும் 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் திருத்தப்படல்<br>2004 ஆம் ஆண்டு தொடக்கம் பெற்றோலிய கைத்தொழிலிற்கான கண்காணிப்பு அதிகாரம் காணப்படாததன் காரணமாக 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொது பயன்பாட்டு சேவை ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் கீழ் கைத்தொழில் கண்காணிப்பிற்கு பெற்றோலியக் கைத்தொழிலை உள்ளடக்குவதற்காக 2006 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் முன்மொழிவொன்று அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க கைத்தொழில் கண்காணிப்பிற்காக பொதுப் பயன்பாட்டு சேவை ஆணைக்குழுவிற்கு கருவிகளை வழங்குவதற்கு 2002 இன் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் மற்றும் 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் என்பவற்றை திருத்தம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது 2018 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். | வரைபு அதிகாரச்சட்டத்தின் மேலதிக திருத்த நடவடிக்கைகளிற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 2019.03.22 இல் பொறுப்பான தற்போதைய அமைச்சரிற்கு விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. மேலும் அறிவுறுத்தல்களை பெற்ற பின்னர் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. |
| ஆ) இயற்கை வாயு தொடர்பான தேசிய கொள்கையை தயாரித்தல்<br>2015 செப்தெம்பர் 21 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி | அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வது | நாளதுவரையாக்கப்பட்ட வரைபு கொள்கை அறிக்கை உடனடியாக அமைச்சிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் இயற்கை வாயு தொடர்பாக தேசிய கொள்கை ஒன்றினை தயாரிப்பதற்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2018 யூன் மாத இறுதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த அவ் இயற்கை வாயு தொடர்பான தேசிய கொள்கை 2018 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். | பெற்றுக்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் வரைபு கொள்கை அறிக்கை அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (இ) | திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதியின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு<br>------------------------------------------------------------ | | |
| | புவியியல் அமைப்பின் பிரகாரம் முழு உலகத்தினதும் கவனம் செலுத்தப்பட்டுள்ள இரண்டாவது ஆழமான திருகோணமலை துறைமுகத்தில் 1930 ஆம் ஆண்டு தொடக்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள எண்ணெய் தாங்கி தொகுதி 12,500 கன மீற்றர் கொள்ளளவினை கொண்டுள்ளதுடன் அது 102 தாங்கிகளையும் ஏனைய துறைசார் வசதிகளையும் கொண்டமைந்துள்ளது. தற்போதுள்ள 99 மொத்த தாங்கிகளில் கீழ் தாங்கிப் பகுதியின் 14 தாங்கிகள் இந்திய எண்ணெய் கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றன. மேல் தாங்கிப் பகுதியில் அமைந்துள்ள 84 கைவிடப்பட்ட தாங்கிகளை நவீனமயப்படுத்துவதற்காக தீர்மானத்தை மேற்கொள்ளுவது தொடர்பான நடவடிக்கைகள் 2015 ஏப்ரல் 29 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் தாங்கித் தொகுதியை அபிவிருத்தி செய்து புனரமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிட்டவாறு | கூட்டுத்தாபனத்திற்கும் இந்தியன் ஒயில் கம்பனிக்கும் பங்குகளை கொள்வனவு செய்வதற்கு சாத்தியமாக துணைக்கம்பனியொன்றை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிதி அமைச்சிற்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் பொது ஊழியர்கள் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. ஆகையால் அவ் வழக்கின் தீர்ப்பை பெற்ற பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தி விஸ்தரித்தல்<br>------------------------------------------------------------ | | |
| | 1969 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை | அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வது | புனரமைப்பு நடவடிக்கைகளிற்காக கிரய மதிப்பீட்டை தயாரிப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | நவீனமயப்படுத்தி விஸ்தரித்தல் தொடர்பாக 2015 மார்ச் 15 ஆம் திகதி தொடக்கம் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை உப குழுக் கூட்டங்களில் பலமுறை விரிவாக கலந்துரையாடப்பட்டிருந்தது. முன்மொழியப்பட்ட செயற்திட்டத்தின் நிதிசார் சாத்தியவள ஆய்வை மேற்கொள்வதற்காக நிபுணர் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 வரையிலும் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். | விலைமனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் சாத்தியவள ஆய்வு மற்றும் தற்கால விலைமனுக்கள் மதிப்பிடப்படுகின்றன. |
| (உ) | புதிய எரிபொருள் இருப்புக் களஞ்சியமொன்றை வட மாகாணத்தில் ஸ்தாபித்தல்<br>------------------------------------------------------------ | | |
| | காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்குரிய நிலப் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய் இருப்புக் களஞ்சியத்தை அவ்விடத்திலிருந்து அகற்றிக்கொள்ளுமாறு 2011 ஆம் ஆண்டில் சீமெந்து கூட்டுத்தாபனத்தால் சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல் லிமிட்டட்டிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. புதிய களஞ்சியத்தை ஸ்தாபிப்பதற்காக பொருத்தமான காணி பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்தமை காரணமாக தற்போதுள்ள எண்ணெய் களஞ்சியங்களை நவீனமயப்படுத்தி விஸ்தரிப்பதற்காக 2016 ஒக்தோபர் 19 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல் லிமிட்டட்டால் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 123.3 மில்லியன் நிலுவை வாடகை செலுத்தப்பட்டிருக்காதமை காணரமாக இச் செயற்திட்டம் 2018 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தது. | மேற்குறிப்பிட்டவாறு | கூட்டுத்தாபனத்திற்காக அமைக்கப்பட்டிருந்த களஞ்சியங்களின் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கான முன்மொழிவை சமர்ப்பித்து 2019.02.08 இல் காணி அமைச்சினால் வர்த்தமானி அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 பெறுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | | |
| | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் 3 ஆண்டுகள் காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் தயாரிக்கப்பட வேண்டிய பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் 3 ஆண்டுகளிற்கான பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் | | |
| (i) | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் தொடர்ந்துவரும் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகை திட்டம் என்பன பெறுகை நிறுவனத்தால் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அதற்கிணங்க செயலகத்தால் 2018 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிட்டவாறு | 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தால் தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2013 ஆம் ஆண்டில் துப்பரவாக்கல் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய சேவை உடன்படிக்கையின் கீழ் அதே நிறுவனத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக சேவை பெறப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டிற்கான துப்பரவாக்கல் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக அந் நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கிணங்க | மேற்குறிப்பிட்டவாறு | மாதமொன்றிற்கு ரூபா 36,500 தொகையை செலுத்துவதன் அடிப்படையில் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் துப்பரவாக்கல் சேவைகளிற்காக 2013 ஆம் ஆண்டில் வழங்குநரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பணவீக்கத்தை கருத்தில் கொண்டும் அவர்களது |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | சேவையின் தரம் தொடர்பாக திருப்தியடைய முடிந்திருந்ததாலும் முன்னாள் நிர்வாக மற்றும் நிதிப் பணிப்பாளரின் பரிந்துரை மீது மாதமொன்றிற்கு ரூபா 50,000 அடிப்படையில் அவர்களது சேவை பெறப்பட்டிருந்தது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஏனைய நிறுவனங்களிற்கு சொந்தமான சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்துதல் | | |
| வெளித் தரப்பினர்களிற்குச் சொந்தமான 02 வாகனங்கள் முறையாக உரிமை மாற்றம் செய்யப்படாது 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலிருந்து அமைச்சால் பயன்படுத்தப்பட்டிருந்தன. | வெளித்தரப்பினர்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையாக உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களை சொந்தமாக கொண்டுள்ள நிறுவனங்களிற்கு வாகனங்களை முறையாக கையளிப்பதற்கு வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வெளித் தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்கள் | | |
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 03 வாகனங்கள் முறையாக உரிமை மாற்றம் செய்யப்படாது வெளித் தரப்பினர்களிற்கு அமைச்சால் விடுவிக்கப்பட்டிருந்தன. | வெளித்தரப்பினர்களிற்கு சொத்துக்களை முறையாக விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களை கையளிப்பதற்கும் கையேற்பதற்கும் முறையான நடைமுறையொன்றை பின்பற்றுவதற்கு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வுகளை நடாத்துதல் | | |
| 2016 மார்ச் 31 ஆம் திகதிய 2016/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2019 மார்ச் 17 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை | உரிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது. உரிய காலப்பகுதியினுள் மேற்கொள்வதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சு மற்றும் செயலகத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் அதற்கிணங்க கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 அரசாங்க அலுவலர்களின் பிணைகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880(i) மற்றும் பிணைகள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பிணைகள் செலுத்த வேண்டிய அமைச்சு மற்றும் செயலகத்தின் உத்தியோகத்தர்களால் பிணைகள் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணைகள் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

**3.7 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவளிக்கப்பட்டிராத 18 வாகன விபத்துக்களிற்குரிய நட்டங்களும் சேதங்களுமாக ரூபா 1,064,226 தொகை காட்டப்பட்டிருந்தது. அவ் விபத்துக்களில் ரூபா 1,040,874 தொகையான 16 விபத்துக்களிற்கான நட்டங்களும் சேதங்களும் தொடர்பில் விபத்துக்கள் இடம்பெற்ற திகதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந் நட்டங்களும் சேதங்களும் 3 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக | நிதிப்பிரமாணம் 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது. விடயத்தை பரீட்சிப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின இறுதி வரையிலும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பழைய அலுவலகத்திலிருந்து பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தை புதிய அலுவலகத்திற்கு மாற்றும் போது முன்னைய அலுவலகத்தில் காணப்பட்ட பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக வீடு ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்ததுடன் அப் பொருட்கள் 2013 ஏப்ரல் மாதத்திலிருந்து விளைவற்றிருந்தன. அரசாங்க நிறுவனங்களின் பொருட்களை அகற்றுவதற்காக 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்காமல் 2013 ஏப்ரல் தொடக்கம் 2018 மே வரையான காலப்பகுதிக்கு மாதமொன்றிற்கு ரூபா 12,000 படி வீட்டு வாடகைக்காக செயலகத்தால் ரூபா 744,000 சிக்கனமற்ற செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அரசாங்க நிறுவனங்களின் அகற்றப்பட வேண்டிய பொருளிருப்புக்கள் முறையாக அகற்றப்பட வேண்டியதன் காரணமாக உரிய காலப்பகுதியினுள் அகற்றப்பட வேண்டிய பொருளிருப்புக்கள் இனங்காணப்பட்டு அகற்றப்பட்டிருக்காதமை பலவீனமொன்றாக காணப்படக்கூடியதாக உள்ளது. எனினும் எதிர்காலத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் இக் களஞ்சிய இல்லங்களில் களஞ்சியப்படுத்துவதால் 2018 ஆம் ஆண்டின் மெய்மையாய்வில் அகற்றப்பட வேண்டிய பொருட்கள் இனங்காணப்பட்டு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பந்தியின் பிரகாரம் கடமைக்கான வெளிநாட்டுப் பிரயாணங்களின் போது அரசாங்க உத்தியோகத்தர்களால் சிக்கன வகுப்பு பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் செயலகத்தின் உத்தியோகத்தர்களால் வணிக வகுப்பை பயன்படுத்திய 4 | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | முன்னாள் இரண்டு பணிப்பாளர்கள் வெளிநாட்டுப் பயணங்களின் போது வணிக வகுப்பு விமானச்சீட்டுக்களை பயன்படுத்தியிருந்ததுடன் அதே முறையை பின்பற்றி தற்போதைய பணிப்பாளர் நாயகத்தினால் வெளிநாட்டுப் பயணங்களின் போது வணிக வகுப்பு விமானச்சீட்டுக்கள் |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 755,556 தொகையான மேலதிக செலவினமொன்று செயலகத்தால் செலவிடப்பட்டிருந்தது. | | பயன்படுத்தப்பட்டிருந்தன. எதிர்காலத்தில் சிக்கன வகுப்பு விமானச்சீட்டுக்களை பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

### 3.9 கணக்காய்விற்கு ஆவணச்சான்று சமர்ப்பிக்கப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்த 10 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை 15 நாட்கள் தொடக்கம் 48 நாட்கள் வரை விஞ்சி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2018 யூலை 17 இல் வழங்கப்பட்டிருந்த 2017 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைக்காக 8 மாத காலப்பகுதி கடந்திருந்த போதிலும் 2019 மார்ச் 31 வரையிலும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(உ) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அமைச்சிற்கு வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் சேகரிக்கப்பட்டு ஒன்றுசேர்க்கப்பட்ட பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. ஏதாவது பிரிவு ஒன்றில் தாமதம் ஏற்பட்டால் முழுமையான பதிலின் தாமதத்திற்கு தாக்கமளிக்கக்கூடும். ஆகையால் எதிர்காலத்தில் இடைக்காலப் பதிலொன்றையேனும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 3.10 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஒக்தோபர் 18 தொடக்கம் 2018 ஒக்தோபர் 20 வரையான காலப்பகுதிக்கு இந்தியா சுற்றுலாவொன்றிற்காக விடய அமைச்சரிற்கு ரூபா 76,209 (ஐ.அ.டொலர் 440) மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2015 மே 15 ஆம் திகதிய 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 04(இ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கு முரணாக வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த 03 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட | 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் | உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பிரயாணங்களிற்காக சாரதிகளை வேலைக்கமர்த்துவதற்காக ஏற்பட்ட கிரயம் அரசாங்கத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பிரயாணங்களிற்காக சாரதிகளிற்கு மேலதிக நேரப் படிகள் மற்றும் இணைந்த படிகளாக ரூபா 250,724 தொகை அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சுமத்தப்படக்கூடாத போதிலும் தனிப்பட்ட பிரயாணங்களிற்காக ரூபா 250,724 தொகையான மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தை உறுதிப்படுத்துவதற்கான சாத்தியத்தன்மை காணப்பட்டது. |
| (இ) | 2018 ஆகஸ்ட் 29, 30, 31 இல் நடைபெற்ற இலங்கை தொழில் நிறுவனக் கண்காட்சிக்கு பங்குபற்றியதற்காக 4 உத்தியோகத்தர்களிற்கு தங்குமிடம் மற்றும் உணவுப் படிகளிற்காக நாளொன்றிற்கு ரூபா 1,500 படி 3 நாட்களிற்கு ரூபா 18,000 ஆகக் கூடிய இணைந்த படிக்குப் பதிலாக ரூபா 96,104 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் உரிய சுற்றறிக்கைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அத்தகைய நிலைமைகளின் போது அனைத்து உணவு மற்றும் தங்குமிடம் என்பன அவர்களிற்கு வழங்கப்பட்ட இணைந்த படிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்ததுடன் அனைத்து அரசாங்க நிறுவனங்களும் மேற்கொள்கின்றதால் உணவு மற்றும் தங்குமிடங்கள் நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன. அரசாங்க நிறுவனமொன்றை பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களால் வழங்கப்பட்ட சேவைக்காக முழுமையான பாதுகாப்பொன்றை வழங்குதல் நிறுவனத்தின் பொறுப்பொன்றாக உள்ளதுடன் இலங்கை சுற்றுலாத்துறை சபையால் அங்கீகரிக்கப்பட்ட வதிவிடமொன்றில் தங்குமிடங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தால் அதில் வேலைசெய்கின்ற 24 உத்தியோகத்தர்களிற்கான மேவுகையாக மருத்துவக் காப்புறுதிப் பூட்கை பெறப்பட்டிருந்தது. செயலகத்தால் குறித்த காப்புறுதிப் பூட்கைக்காக 2018 ஆம் ஆண்டிற்காக உத்தியோகத்தர் ஒருவரிற்கு ரூபா 89,300 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கான செலவினங்களை இழிவுபடுத்தி முறையான அங்கீகாரத்தின் கீழ் நியாயமான நன்மைகளை ஏற்படுத்தி உத்தியோகத்தர்களிற்கு காப்புறுதிப் பூட்கை ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கிரயத்தை இழிவுபடுத்துவதற்காக தங்களால் குறிப்பிடப்பட்டவாறு நன்மைகளை குறைத்து குறைந்த கிரயமொன்றில் காப்புறுதிப்பூட்கையை வழங்குவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

**3.11 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து நியதிச்சட்ட நிறுவனங்களும் செயற்பட வேண்டியதுடன் அமைச்சு அதன் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகள் தொடர்பான இலக்குகள், அந்த இலக்குகள் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குக் கட்டங்கள், அவை அடைந்துகொள்ளப்படுவதை அளவிடுவதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டுகொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | அதன் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், அந்த இலக்குகள் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குக் கட்டங்கள், அவை அடைந்துகொள்ளப்படுவதை அளவிடுவதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டுகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அமைச்சால் வரையப்பட்ட தேசிய வாயுக் கொள்கையானது இலக்குகளை அடைந்து கொள்வதற்கான சுட்டியொன்றாக இனங்காணப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக அமைச்சின் பதவியணியினரை கண்காணிப்பதற்காக அமைச்சால் எந்தவொரு உள்ளக சுற்றறிக்கையோ அல்லது வழிகாட்டலோ 2018 திசெம்பர் 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது பற்றி அக்கறை கொண்டுள்ள தரப்பினர்களிற்காக எந்தவொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றும் போது இது பற்றி அக்கறை கொண்டுள்ள தரப்பினர்களிற்காக உள்ளக சுற்றறிக்கைகள் அல்லது வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் என்பன அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | அமைச்சிற்கு எழுத்து மூலம் உரிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிவித்ததன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் தரவுகளை சேகரிப்பதற்கான முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் உத்தியோகத்தர் ஒருவர் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் போது தரவு சேகரிப்பதற்கான முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு அது தொடர்பாக உத்தியோகத்தரொருவர் வேலைக்கமர்த்தப்பட வேண்டும். | அமைச்சிற்கு எழுத்து மூலம் தகவல் சேகரிப்பு முறைமை பற்றி அறிவித்ததன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான நிதியேற்பாட்டு தேவைப்பாடு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் இனங்காணப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் தற்போதுள்ள பௌதீக வளங்கள் மற்றும் பதவியணியினரை பயன்படுத்துவதற்கான முறைமையொன்று இனங்காணப்பட்டிருக்காத அதே நேரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான முறைமையொன்றும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான நிதியேற்பாடுகள், மனித மற்றும் பௌதீக வளங்கள் இனங்காணப்பட்டு அவ் வளங்களை பயன்படுத்துவதற்கான முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக அமைச்சால் இனங்காணப்பட்ட அவ்வாறான தேசிய வாயுக் கொள்கையை தயாரித்தல் மற்றும் யூரோ 4 எரிபொருளை அறிமுகப்படுத்துதல் தொடர்பான செயற்பாடுகளிற்காக நிதி அமைச்சிடமிருந்து 2019 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடுகளை தயாரிக்கும் விடயத்தில் ரூபா 3 மில்லியன் தொகை கோரப்பட்டிருந்தது. |